பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

04 08 2025 7 15
***திங்கட்கிழமை*** காலை

தலைப்புச் செய்திகள்

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா சந்தித்துப் பேசியுள்ளார்.

2. Bimstec உறுப்பு நாடுகளின் பாரம்பரிய இசைத் திருவிழாவை புதுதில்லியில் வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் இன்று தொடங்கி வைக்கிறார்.

3. பிலிப்பைன்ஸ் அதிபர் திரு. Ferdinand Marcos Junior இந்தியாவில் 5 நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

4. ராஷ்டிரிய ஜனதாதள தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ் வைத்திருக்கும் வாக்காளர் அடையாள அட்டை தேர்தல் ஆணையத்தால் வழங்கப்படவில்லை என்று அந்த ஆணையம் தெரிவித்துள்ளது.

5. சப் ஜூனியர் தேசிய நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டிகள் பெங்களுருவில் இன்று தொடங்குகிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<>>>>**

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா சந்தித்துப் பேசியுள்ளார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் நடைபெற்ற இந்த சந்திப்பின்போது, நடப்பு அரசியல் விவகாரங்கள் குறித்து விவாதித்ததாக தெரிகிறது.

குடியரசுத்தலைவரை நேற்று காலை பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்துப் பேசிய நிலையில், உள்துறை அமைச்சரும் சந்தித்துப் பேசியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

**<<<<>>>>**

Bimstec உறுப்பு நாடுகளின் பாரம்பரிய இசைத் திருவிழா புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

பாரத் மண்டபத்தில் நடைபெறும் இந்தத் திருவிழாவை வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தொடங்கி வைக்க உள்ளார்.

கலாச்சார உறவுகளுக்கான இந்திய கவுன்சில் ஏற்பாடு செய்துள்ள இந்த இசைத்திருவிழாவில் இந்தியா, பங்களாதேஷ், புடான், மியான்மர், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து நாடுகளைச் சேர்ந்த இசைக்கலைஞர்கள் பங்கேற்று Bimstec உறுப்பு நாடுகளின் தனித்துவமான இசைகளை இசைக்க உள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் தாய்லாந்தில் நடைபெற்ற Bimstec உச்சிமாநாட்டில் பேசிய பிரதமர் திரு. நரேந்திர மோடி,

பிராந்திய கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் நோக்கில் இந்தியாவில் இசைத் திருவிழா நடத்தப்படும் என்று அறிவித்ததற்கு இணங்க இந்த விழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய கலாச்சாரத்துறை தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

பிலிப்பைன்ஸ் அதிபர் திரு. Ferdinand Marcos Junior இந்தியாவில் 5 நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

அவருடன் அந்நாட்டு அமைச்சர்கள் மற்றும் வர்த்தக பிரதிநிதிகள் அடங்கிய உயர்மட்டக் குழுவினரும் வருகின்றனர்.

புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்தித்து இருதரப்பு உறவுகள் மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்துவது குறித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் உள்ளிட்டோரையும் அவர் சந்தித்துப் பேசவுள்ளார்.

பின்னர் பிலிப்பைன்ஸ் அதிபர் பெங்களூருவில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற பின் தயாகம் திரும்புவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ராஷ்டிரிய ஜனதாதள தலைவரும், பீஹார் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. தேஜஸ்வி யாதவ் பத்திரிகையாளர் சந்திப்பில் காட்டிய வாக்காளர் அடையாள அட்டையின் விவரங்களை சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

அவர் வைத்திருக்கும் வாக்காளர் அடையாள அட்டை தேர்தல் ஆணையத்தால் வழங்கப்படவில்லை என்று திகா சட்டப்பேரவைத் தொகுதி வாக்காளர் பதிவு அதிகாரி தெரிவித்துள்ளதால், அதனை ஆய்வு செய்ய வேண்டியிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே திரு. தேஜஸ்வி யாதவ் 2 வாக்காளர் அடையாள அட்டைகளை வைத்திருப்பதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு. சம்பித் பத்ரா, திரு. யாதவ் தேர்தல் ஆணையத்திடம் தவறான தகவல்களை தெரிவித்திருப்பதாகவும் கூறினார்.

<<<<>>>>

கரியமில வாயு வெளியேற்றத்தை முற்றிலும் கட்டுப்படுத்துவது என்ற மத்திய அரசின் தொலைநோக்கை

எட்டுவதில் Kandla துறைமுகம் முன்னோடியாக திகழ்கிறது என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி பாராட்டியுள்ளார்.

குஜராத் மாநிலம் கட்ச் மாவட்டத்தில் உள்ள இந்தத் துறைமுகத்தில் முற்றிலும் உள்நாட்டு தொழில்நுட்பத்தால் அமைக்கப்பட்ட முதலாவது பசுமை ஹைட்ரஜன் ஆலை செயல்பாட்டுக்கு வந்திருப்பதை தமது சமூக வலைதளத்தில் பிரதமர் பகிர்ந்துள்ளார்.

தீன்தயாள் துறைமுகத்தின் இந்த நடவடிக்கை ஒரு நீடித்த முன்முயற்சி என்றும் பிரதமர் திரு. நரேந்திரமோடி குறிப்பிட்டுள்ளார்.

**<<<<>>>>**

மக்களுக்கு நீதி வழங்குவதற்காகவே பிரதமர் திரு. நரேந்திர மோடி புதிய குற்றவியல் சட்டங்களை கொண்டுவந்துள்ளதாக மத்திய சட்டத்துறை அமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் கூறியுள்ளார்.

தில்லி சட்டப்பேரவையில் அமைக்கப்பட்டுள்ள சூரியசக்தி மின் உற்பத்தி நிலையத்தை தொடங்கி வைத்துப் பேசிய அவர், இதன்மூலம் இந்தியர்களை தண்டிப்பதற்காக ஆங்கிலேயர் கொண்டு வந்த இந்திய குற்றவியல் சட்டங்களின் பயன்பாடு கைவிடப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

தில்லி யுனியன்பிரதேசத்தில் மூன்று புதிய குற்றவியல் சட்டங்களும் முழுமையான பயன்பாட்டிற்கு வந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதுதவிர Neva எனப்படும் தேசிய மின்னணு சட்டப்பேரவை நடைமுறைகள், நாட்டில் உள்ள அனைத்து சட்டப்பேரவைகளிலும் காகிதப் பயன்பாட்டை குறைக்கும் என்றும் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் நம்பிக்கை தெரிவித்தார்.

**<<<<>>>>**

உத்தரப்பிரதேச காவல்துறையின் தொலைத்தொடர்பு பிரிவில் பணியாற்ற தேர்வு செய்யப்பட்டுள்ள சுமார் ஆயிரத்து 500 பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை அம்மாநில முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் வழங்கினார்.

இவர்களில் ஆயிரத்து 374 பேர் உதவி ஆப்ரேட்டர்களாகவும், 120 பேர் பணிமனை பணியாளர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நிகழ்ச்சியில் பேசிய யோகி ஆதித்யநாத், இம்மாநிலத்தில் அரசுப் பணி நியமனங்களில் ஊழல் மற்றும் வாரிசுகளின் ஆதிக்கம் ஒழிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

2011ஆம் ஆண்டுக்கு முன்பு மாநிலத்தில் வேலைவாய்ப்பில் பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

தற்போது அனைத்து துறைகளிலும் தகுதியான இளைஞர்கள் உரிய வாய்ப்பை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

**<<<<>>>>**

உலகக்கோப்பை மகளிர் செஸ் போட்டியில் பட்டம் வென்ற இந்திய வீராங்கனை திவ்யா தேஷ்முக்கிற்கு மகாராஷ்டிர ஆளுநர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் பரிசு வழங்கி பாராட்டு தெரிவித்துள்ளார்.

நாக்பூரில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அரசு அதிகாரிகள் மற்றும் விளையாட்டுத்துறையினர் கலந்துகொண்டனர்.

**<<<<>>>>**

அமெரிக்காவுக்கான இந்திய தூதர் திரு. வினய் மோகன் குவாத்ரா, அமெரிக்க புலனாய்வு அமைப்பின் இயக்குநர் திருமதி Tulsi Gabbard-ஐ சந்தித்து பரஸ்பர நலன் சார்ந்த அம்சங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் திருமதி Gabbard உடனான சந்திப்பு ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படுவதாக அமெரிக்க அதிபர் திரு. ட்ரம்ப் வெளியிட்ட அறிவிப்பு நடைமுறைக்கு வந்துள்ள நிலையில் இந்த சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

**<<<<>>>>**

நாட்டின் ஸ்மார்ட் போன் ஏற்றுமதி இதுவரை இல்லாத அளவாக 7 புள்ளி ஏழு இரண்டு பில்லியன் டாலர் என்ற அளவை எட்டியுள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தைவிட 4 புள்ளி 9 பில்லியன் டாலர் அதிகம் என்றும், 82 சதவீதம் ஏற்றுமதி அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஆப்பிள் நிறுவனத்தின் ஸ்மார்ட் போன்கள் 6 பில்லியன் டாலர் அதிகரித்துள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவின் மொத்த மின்னணு சாதன ஏற்றுமதி 12 பில்லியன் டாலருக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

**<<<<>>>>**

ஏ.டி.எம். மையங்களில் 500 ரூபாய் நோட்டுகள் பட்டுவாடாவை நிறுத்தும்படி வங்கிகளுக்கு எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்று ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

வரும் செப்டம்பர் 30ஆம் தேதியுடன் 500 ரூபாய் நோட்டுகளை ஏ.டி.எம். எந்திரங்களில் நிரப்புவதை நிறுத்தும்படி வெளியாகியுள்ள வாட்ஸ்அப் தகவல்கள் முற்றிலும் உண்மைக்கு மாறானது என்று ரிசர்வ் வங்கி விளக்கம் அளித்துள்ளது.

மேலும் வருங்காலத்தில் 100 ரூபாய் மற்றும் 200 ரூபாய் நோட்டுகளை மட்டுமே ஏ.டி.எம். மையங்களில் எடுக்க முடியும் என்ற தகவலையும் ரிசர்வ் வங்கி மறுத்துள்ளது.

<<<<>>>>

சப் ஜூனியர் தேசிய நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டிகள் பெங்களுருவில் இன்று தொடங்குகிறது.

வாட்டர் போ மற்றும் டைவிங் போட்டிகளும் இன்று தொடங்குகிறது.

இதில் சுமார் 600க்கும் அதிகமான வீரர்-வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

----------------

கஜகஸ்தானில் நடைபெற்று வரும் தடகளப் போட்டியின் ஆடவர் Triple Jump பிரிவில் இந்தியாவின் அப்துல்லா அபுபக்கர் பட்டம் வென்றார்.

அவர் 16 புள்ளி புஜ்ஜியம் எட்டு மீட்டர் தொலைவைத் தாண்டி முதலிடம் பெற்றார்.

--------------

கொல்கத்தாவில் நடைபெற்று வரும் துரந்த் கோப்பை கால்பந்துப் போட்டியில் பஞ்சாப் நம்தாரி அணி – இந்திய விமானப் படை அணியை 4-2 என்ற கோல் கணக்கில் வென்று ஏ பிரிவில் முன்னிலை பெற்றுள்ளது.

<<<<>>>>